தேசிய தாய்ப்பாலூட்டல் வாரம் - 2024 ஆவணி 1 - 7
தேசிய தாய்ப்பாலூட்டல் மாதம் - 2024 ஆவணி

*இலங்கையில் தாய்ப்பாலூட்டலின் மேன்மையினைப் பேணுவோம்*


"தாய்ப்பாலூட்டலுக்கான ஆதரவை சகலருக்கும் சமமாக வழங்குவோம்"!

**தாய்ப்பாலூட்டலுக்கான தேசிய பரிந்துரைகள்**

- பிறந்து ஒரு மணி நேரத்துக்குள் தாய்ப்பாலூட்டலை ஆரம்பித்தல்
- முதல் ஆறு மாத காலத்திற்கு தனியான தாய்ப்பாலூட்டல்
- தாய்ப்பாலூட்டலுடன் ஆறு மாதத்தில் போதுமானளவு போஷணை மற்றும் பாதுகாப்பான மேலதிக உணவை (திண்மம்) ஆரம்பிப்பதுடன் தாய்ப்பாலூட்டலை 2 வயது அல்லது அதற்கப்பாலும் தொடருதல்.


தேவையான நடவடிக்கை

தற்போதுள்ள தாய்ப்பாலூட்டலுக்கான ஆதரவு அமைப்புக்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் சமத்துவமற்ற தன்மையைக் கருத்திற்கொண்டு அனைத்துப் பெற்றோர்களும் தாய்ப்பாலூட்டலுக்குத் தேவையான ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டிய அவசரத் தேவையுள்ளது.




**சகல தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குடும்பங்களுக்கானது (பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் விசேட கவனம் செலுத்தி)**

- தாய்ப்பாலூட்டலுக்கான சரியான அறிவு, வழிகாட்டல் மற்றும் ஆதரவு குழந்தை பிறப்பிற்கு முன்னரே (கர்ப்ப காலத்தில்) ஆரம்பித்து குழந்தை பிறந்த பின்பும் அதற்கப்பால் வரையும் தொடர்தல்
    - வெற்றிகரமான தாய்ப்பாலூட்டலுக்கான நோக்கத்தை உறுதியாக நிலைப்படுத்தல்
    - முரண்பாடான தாக்கங்களை எதிர்க்கும் அறிவு/ஆதரவு அடிப்படையிலான பலத்தினைக் கொண்டிருத்தல்.
- பிரசவ நேரத்திலிருந்து பிரசவ அறை/ சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் பிரசவத்திற்குப் பின்னரான வசதிகளில் புதிதாகப் பிறந்த குழந்தைக்க தாய்ப்பால் கொடுப்பதை தொடங்கவும் அதனைத் தொடரவும் பயிற்சி பெற்ற மற்றும் திறமையான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு வழங்கல்.
- தாய்ப்பாலூட்டும் தாய்மாருக்கான தாய்ப்பாலூட்டலைத் தொடர்வதற்கான பிரசவத்தின் பின்னரான ஆதரவினூடாக
    - தரமான, பிரசவத்திற்குப் பின்னரான குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தரின் வீட்டுத் தரிசிப்பு,
    - வைத்தியசாலையின் பிரசவத்திற்குப் பின்னரான பிணியாய்வு ( அரச மற்றும் தனியார்) மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அங்கு தாய்ப்பாலூட்டல் நிலையினை மதிப்பிட்டு போதுமானளவு ஆதரவ வழங்கப்படும்.
- மேலதிக உணவினை ஆரம்பிக்கும் போது சரியான தகவல் மற்றும் வழிகாட்டி தனியான தாய்ப்பாலூட்டலிற்கான இறுதியில் ஆரம்பித்தலுடன் தாய்ப்பாலூட்டலினை 2 வயது மற்றும் அதற்கப்பாலும் தொடர்தல்





**வேலைக்கு செல்லும் பெற்றோர்களுக்கான விசேட ஆதரவு.**


- வேலைக்கு செல்லும் பெற்றோர்களுக்கான வார இறுதிப் பிணியாய்வு சேவைகள்/விழிப்புணர்வு அமர்வுகள்
- வேலைக்கு செல்லும் தாய்மார் வேலையிலிருந்து திரும்பியதும், தாய்ப்பாலூட்டலைத் தொடர்வதுடன் 6 மாதம் வரை பாலைக் கறந்து வைத்து தனியான தாய்ப்பாலூட்டலை வெற்றிகரமாகத் தொடர்தல் மற்றும் ஆறு மாதங்களின் பின் தாய்ப்பாலூட்டலுடன் மேலதிக உணவூட்டல்
    - பாலைக் கறத்தல் அதனை சேமித்தல் மற்றும் குழந்தைக்கு ஊட்டுதல் தொடர்பான பயிற்சிகளையும் திறன்களையம் தாய் மற்றம் குடும்பத்தினருக்கு சுகாதார அலுவலரினால் வழங்குதல்
    - பெற்றோர்களின் தாய்ப்பாலூட்டலுக்கான நோக்கத்தினை அடைவதற்காக குடும்பம், தொழில் வழங்குநர், தொழில் இடத்தின் சக ஊழியர்கள் ஆதரவழித்தல்.
- வேலை இடத்தின் தேவைகள் - தொழிலாளர்களுக்கு (தாய்/தந்தைக்கான) ஊதியத்துடனான பிரசவ கால விடுமுறை நன்மைகள், பெற்றோர்-நட்பு ரீதியான பணியிடக் கொள்கைகள், தாய்ப்பாலூட்டல்/பாலைக் கறந்து ஊட்டல்

(உ+ம் குழந்தைக் காப்பகங்கள், தாய்ப்பாலூட்டும் அறைகள்), ஊதியத்துடனான தாய்ப்பாலூட்டலுக்கான இடைவேளைகள் மற்றும் நெகிழ்வான வேலை ஏற்பாடுகள் போன்ற தாய்ப்பாலூட்டலுக்கான ஆதரவுகள்


தாய்/தந்தை பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் வேலைத்தளத்தில் தாய்ப்பாலூட்டலை ஆதரித்தல் போன்றவை சமூக நீதியை அடைவதற்கான வழிமுறையாகக் கருதப்படும். **சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) பரிந்துரையின் படி** முறைசார் மற்றும் முறைசாராப் பிரிவுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் (தாய்/தந்தை) ஊதியத்துடனான மகப்பேற்று விடுப்பினை பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதை தேசியக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் வலியுறுத்தல் வேண்டும். அனைத்து தொழிலாளர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு இன்னும் கணிசமான இடைவெளி உள்ளது




**தனியார்ப்பிரிவு வைத்தியசாலைகளின் விசேட தேவைகள்** - பயிற்சி பெற்ற மற்றும் திறனுள்ள அலுவலர்களால் சகல பெற்றோர்கள்/குடும்பங்களுக்கு சரியான தாய்ப்பாலூட்டல் ஆதரவை கருத்தரிப்பிற்கு முன்பிலிருந்து தொடங்கி பிரசவத்திற்கு முன்னரான பராமரிப்பு மற்றும் பிரசவத்திற்கு பின்னர் திறனான செய்முறை ஆதரவை வழங்குவது இன்றியமையாத தேவையாகும். தாய்ப்பாலூட்டுவதை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், அதற்கு ஆதரவளிப்பதற்கும் பெயர் குறிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குமான இலங்கைக் கோவை (2002)இனை, பாலுணவு நிறுவனங்களின் வணிக ரீதியான செல்வாக்கிலிருந்து பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களை பாதுகாப்பதற்கு கண்டிப்பாக கடைப்பிடிப்பது கட்டாயமாகும்.




**இயற்கை அனர்த்தங்கள் மற்றும் நெருக்கடியான நிலைமைகளால் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் /குடும்பங்களுக்கான விசேட ஆதரவு** - அவசர காலத் தேவை மதிப்பீடு, தாய்ப்பாலூட்டல் நட்பான சுகாதார மற்றும் வேறு சேவைகள், அவசர நிலைமையின் போது தாய்ப்பாலூட்டலை உறுதிப்படுத்தல், நன்கொடைகளைக் கண்காணித்தலும் நன்கொடை வழங்குநரை வழிப்படுத்தலும், சுத்தமானதும் பாதுகாப்பானதுமான நீர் மற்றும் உணவு கிடைக்கக்கூடியதாக இருத்தல், தாய்ப்பாலூட்டல் மற்றும் உள்ளூரில் கிடைக்கும் மலிவானதும் ஆரோக்கியமானதுமான உணவின் மூலம் எவ்வாறு சிறந்த போஷணையினை உறுதிப்படுத்தல் பற்றிய சரியான தகவல்கள் ஆகியன சில முக்கிய கூறுகளாகும். குழந்தைகள் மற்றும் இளம் சிறார்களுக்கான உணவூட்டல் தொடர்பான தேசிய பரிந்தரைகள் உட்பட சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டியினை இவ் ஆதரவினை வழங்கும் போது கண்டிப்பாக கடைப்பிடித்தல் முக்கியமானது.




**தாய்ப்பாலூட்டல் ஆதரவில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைத்து அனைவருக்கும் தாய்ப்பாலூட்டல் ஆதரவை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழங்குநர் (அரச மற்றும் தனியார் பிரிவு), தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சமூகங்களை அழைக்கின்றோம்.**

**உங்களது எல்லைக்குள் தாய்ப்பாலூட்டல் ஆதரவை வழங்குவதில் உங்கள் பங்களிப்பை உறுதிப்படுத்துவதுடன்**

**எங்களுடைய தேசிய தாய்ப்பாலூட்டல் மாதம் 2024 இன் பிரச்சாரத்தில் இணைந்துகொள்வதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கிடையிலான இடைவெளிகளை மூடி அனைவருக்கும் தாய்ப்பாலுட்டல் ஆதரவை வழங்கலை உறுதிப்படுத்தவும்.**